மழையூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை: திருமதி.மு.சரஸ்வதி

ந.க. 01/2024 நாள்: 31.05.2024

பொருள்: மனைப்பிரிவு - திருவண்ணாமலை மாவட்டம் – தெள்ளார் ஊராட்சி ஒன்றியம் – மழையூர் ஊராட்சி கிராம சர்வே எண்: 172/2B 1.59 ஏக்கர் (ஹெக்டேர் 0.64.50) பரப்பில் அமைந்துள்ள சாரல் நகர்-1, குடியிருப்பு மனைப்பிரிவினை திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஊராட்சி மன்ற தீர்மானம் இயற்றி இறுதி ஒப்புதல் வழங்குதல் – சார்பாக.

பார்வை: 1. திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் எண்: 107/2024 திருவண்ணாமலை, நாள்: 17.04.2024.

2. மனுதாரர் திரு.ரா.சக்திபிரசன்னா அவர்களின் கடிதம், நாள: .05.2024.

3. மழையூர் ஊராட்சி மன்ற தீர்மாண எண்:29/2024 நாள்: 31.05.2024.

உத்தரவு:

பார்வை 1-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் கடிதத்தில் தெள்ளார் ஊராட்சி ஒன்றியம் மழையூர் ஊராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்:172/2B-ல் 1.59 ஏக்கர் (ஹெக்டேர் 0.64.50) பரப்பளவில் சாரல் நகர்-1 குடியிருப்பில் அமைந்துள்ள 1 முதல் 38 மட்டும் மனைகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் சேத்துப்பட்டு முகவரியை சேர்ந்த திரு.ரா.சக்திபிரசன்னா என்பவர் மழையூர் ஊராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்:172/2B-ல் 1.59 ஏக்கர் (ஹெக்டேர் 0.64.50) பரப்பளவில் அமைந்துள்ள சாரல் நகர்-1 குடியிருப்பில் அமைந்துள்ள 38 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் அளிக்கக்கோரியுள்ளார்.

திட்டமில்லா பகுதி/ திட்டப்பகுதியில் அமையும் மனை பிரிவுக்கான கூராய்வு கட்டணமாக ரூ.2000/-, தனி மனைக்கான கட்டணம் ரூ.38,000/- மற்றும் இடத்தின் சந்தை மதிப்பின் 3% தொகையை நிலப்பயன் மாற்றக்கட்டணமாக ரூ.9,540/- மட்டும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. எனவே சர்வே எண்:172/2B-ல் 1.59 ஏக்கர் (ஹெக்டேர் 0.64.50) பரப்பளவில் அமைந்துள்ள சாரல் நகர்-1 குடியிருப்பில் அமைந்துள்ள 1 முதல் 38 மட்டும் மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 3-ல் கண்டவாறு மழையூர் கிராம ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் மேற்படி மனைகளுக்கு நில மேம்பாட்டாளர் பத்திர பதிவு அலுவலகத்தில் விற்பனை செய்துகொள்ள கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு கிராம ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. வரைபடத்தில் உள்ளவாறு வீட்டு மனைகள் 1 முதல் 38 வரை அங்கீகரிக்கப்படுகிறது.

2. கூடுதல் மனைகள் செய்யவேண்டியிருப்பின் அல்லது வரைபடத்தில் மாறுதல் வேண்டியிருப்பின் ஊராட்சியின் அனுமதியுடன் மாறுதல் செய்யப்படவேண்டும்.

3. ஊராட்சியின் அனுமதி இல்லாமல் நில வரைபடத்தை திருத்தவோ மாற்றி அமைக்கவோ கூடாது.

4. வரைபடத்தில் மாறுதல் செய்யவேண்டியிருப்பின் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி வரைபடத்தை மாறுதல் செய்துகொள்ளவேண்டும்.

5. வீட்டு மனைகள் பற்றிய இதர ஆவணங்களையும் நில மனைப்பிரிவு வரைபடத்தையும் நிர்வாக அலுவலர் மற்றும் தலைவர் கேட்கும்போது காண்பிக்கப்படவேண்டும்.

6. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தெருக்கள், பொது இடங்கள், வீட்டு மனைகள் ஒதுக்குவதிலோ அல்லது மனையின் அளவுகள் குறித்த பிரச்சனைகள் ஏதேனும் வரும்பட்சத்தில், அப்பிரச்சனைகளை தாங்களே முன்னின்று தீர்வுகாண வேண்டும்.

7. பத்திரத்தில் பதிவு செய்துள்ள இடத்திற்கு மட்டுமே வீட்டுமனைகள் அங்கீகரிக்கப்படும்.

தலைவர் / நிர்வாக அதிகாரி
மழையூர் ஊராட்சி
தெள்ளார் ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

1. திரு.ரா.சக்திபிரசன்னா
   எண்:1, வெங்கடாஜலபதி தெரு,
   பழம்பேட்டை, சேத்துப்பட்டு,
   திருவண்ணாமலை மாவட்டம்.

நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), செய்யாறு கோட்டம்.

நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஊராட்சி ஒன்றியம், தெள்ளார்.

நகல்: அ3 இருப்பு கோப்பிற்கு.